Arimaa Nokku

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்
INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்
UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

ISSN 2320-4842

அரிமா நோக்கு

18:2 ஜுலை 2024

ஆசிரியர்

ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்

இரா.பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

ஒப்பிலா மதிவாணன்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

அறிவுரைக் குழு

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்

இரா. பன்னிருகைவடிவேலன்

259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096

arimaanokkuu@gmail.com

+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

புலவர் குழந்தையின் பன்முக ஆளுமை - கோ. பழனி 5
புறநானூற்றில் விளிம்பு நிலை வாழ்வியல் - மு. வையாபுரி 10
நகரத்தார் வழிபாட்டில் நாயன்மார்கள் - சி. சிதம்பரம் 21
வில்லிபாரதத்தில் இணைப்பொருட்கள் - கு. வினோத்குமார் 26
போகரும் பயண இலக்கியமும் - முனைவர் வெ. சிவசங்கர் 31
குடியேற்ற நகர தாலாட்டில் சமூகவியல் - பி. வசந்தபிரியா 34
பக்தி இலக்கியத்தில் ஆடற்கலை - ச. விஜயலட்சுமி 38
நவீன கவிதைப் புனைவுகளில் பெண் மொழி
முனைவர் கோ. நிர்மலாதேவி 44
வீர மரபும் அதிகாரப்படி நிலைகளும் - பொ. அகத்திய பாலா 50
அகத்திணைப்பாடல்களில் தமிழர் திருமணம் -தே. ராஜகுமார் 57
எட்டுத்தொகை அகப்பாடலில் யுவதிகளின் தொழில்கள்
கா. புவனேஸ்வரி 65
தொல்காப்பிய அகத்திணையியலில் காணலாகும் சமூகப்படி
நிலைகள் - ரா. முத்துப்பாண்டி 68
ரகுநாத சேதுபதி திருப்புல்லாணித் திருத்தலத்திற்கு
வழங்கிய ஊர் தானங்கள் - ஆ. கவிதாராணி 73
சங்க கால மருதநில வழிபாடுகள் - ஆ. சரஸ்வதி 78
அறிமுக நோக்கில் செந்தமிழ் இதழும் திருக்குறளும்
இ. நாகராஜ் 81
திருமூலரின் அறசிந்தனைகள் - G. வரதராஜன் B.A. 87
இமையம் நாவல்களில் பெண்ணியச் சிக்கல்கள்
ப. மலர்விழி 91
A Comparative Study on Peranbu and Trying to Grow
- A Study of Sexuality in Persons with Disabilities
R. Nilavazhagan 95
அரபு மற்றும் தமிழ் மொழிகளுக்கு இடையேயான
உறவுகள்: ஓர் ஆய்வு - மு.ர. தமீம் அன்சாரி 98
திருப்பழனிமலைப் பதிகம் கூறும் முருகன் - தமிழரசன். பா 105
கந்தபுராணப் பாத்திரப்படைப்புகளில் மாயை
வே. விஷ்ணுபிரியா 109
புலவர் புராணம் காட்டும் கம்பரின் புலமைத் திறம்
ம. பிரவீன் குமார் 113
பண்டைய தமிழர்களின் ஓவியக்கலை - மா. ரசல் ஜெயபதி 117
நற்றிணையில் விருந்தோம்பல் - ஜெனோவா 122
சுந்தரரின் திருக்கோடிக்குழகர் பதிகத்தில் இயற்கை-ம.வளர்மதி 127
சங்க இலக்கியமும் கவின் கலைகளும்
முனைவர் வா. மு. சே.முத்துராமலிங்க ஆண்டவர் 132
நாக வழிபாட்டில் நம்பிக்கைகள் - மு. பழனியம்மாள் 136
கிறித்தவக் காப்பியங்களில் அறம்
முனைவர் இ.மேரி இமாகுலேட் ராஜகுமாரி 140
செஞ்சி வட்டாரப் படைப்புக் களத்தில்
பெண்கவிஞர்களின் பங்களிப்பு - சு. இளவரசி 144
சுப்ரபாரதிமணியனின் மூன்று நதிகள் என்ற சிறுகதைகள்
தொகுப்புக் காட்டும் பின் நவீனத்துவக்கூறுகள்
தி. உமாதேவி 148
அளம் நாவல் காட்டும் பெண்களின் நிலை
பெ.சிவசக்தி - முனைவர் வி. கலாவதி 154
தமிழில் அறிவியல் இதழ்கள்
முனைவர் மு. கோவிந்தராஜுலு 158
பெயல் மணக்கும் பொழுது ஈழக்கவிதைத் தொகுப்பு ஓர் ஆய்வு
ஜோ. இளங்கோவன் - வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் 160
நாட்டுப்புறப்பாடல் வகைமைகள்
கி. சுப்பிரமணி 163
மன்னர் - புலவர் உறவு - முனைவர் ரா. திவ்யா 168
எட்டுத்தொகை அகப் பாடல்களில் வெரூஉதல் மெய்ப்பாடு
முனைவர் செ. பவித்ரா 171
குறிஞ்சி நில வருணனையில் மலர்கள்
முனைவர் செ. ஜமுனா 174

ISSN 2320-4842

# மன்னர் - புலவர் உறவு

முனைவர் ரா. திவ்யா
உதவிப்பேராசிரியர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

சங்க கால வேந்தர்களின் சிறப்புகளின் ஒன்று புலவருடன் கொண்டிருந்த நட்பாகும். மன்னர்களைப் பாடி பரிசுகளை வேண்டுவதை தொழிலாகக் கொள்ளாமல், அவர்கள் தவறுகளைச் செய்கின்ற நேரங்களில் அஞ்சாமல் கண்டித்து அறநெறிகளிலே அவர்களை வழிபடுகின்ற இயல்பினை உடையவர்கள் புலவர் பெருமக்கள் திகழ்ந்தனர். சங்கப் புலவர்களின் மன்னர்களின் மேல் அன்பு செலுத்துவதும், நட்புக் கொள்வதும் ஏதாவது குறைகளை கண்டுபிடித்தல், அதனை மென்மையான கண்டிருந்தாலும், நிறையினைக் கண்ட விடத்தில் மேம்படுத்த பாராட்டுதலும் காணமுடிகின்றது.

"நாடாளும் தலைவர்கள், இலக்கியம் இயற்றும் புலவர்களையே விழுமியராகப் போற்றி வந்தனர். அரசனை அவன் என்றும் புலவரை அவர் என்றும் சுட்டிக்காட்டியது நாகரீகம் மதிப்பாகும். அரசியலில் தலையிட்டு அறிவுரையும் கூறியும், அறிவுரைகளை நல்கியும் அரசரின் போக்கு இருந்து உரிமை புலவர்கள் இருந்தது. அரசர், குறுநில மன்னர் ஆகியோரின் குடும்ப வாழ்விலும் புலவர் தலையிட்டு ஆவண செய்யும் ஆர்வத்தினைக் கொண்டிருந்தனர்" (சங்க இலக்கியத்தின் வேந்தர்கள் ப.51) என்று மு.வ. கூறுவதாக அரங்க இராமலிங்கம் குறிப்பிடுகிறார்.

புலவர்கள் புகழ்ந்து பாடுவதை பெரும்பேறாகக் கருதி வந்தனர் மன்னர்கள். அப்படி வாழ்த்தினைப் பெறுகின்றவர்கள் துறக்கம் எழுதுவர் என்கிற நம்பிக்கை அக்காலத்தில் நிலவியது. இதனை,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான ஊர்தி
வலவ னேவா வானவூர்தி
எய்துப வென்பதாம் செய்வினை முடித்தென" (புறநானூறு 27 7-9)

"இவன் இசை உடையோர் கல்ல தவனது
உயர்நிலை உலகத்து துறை உள்ள இன்மை" (புறநானூறு 50.14-15)

என்று புறநானூறு குறிப்பிடுவதை இப்பாடலினால் புலவர்கள் தங்களை வாழ்த்த வேண்டும் என்ற மன்னரின் விருப்பம் இருவரின் தொடர்புக்கு காரணம் என அறிய முடிகிறது.

## புரவலரும் புலவரும்

புலவர்களுக்கும் புரவலர்களுக்கும் இடையே தோன்றிய உறவு சங்ககால வாழ்க்கை நெறிகளுள் ஒன்றாகவே இருந்தது. இருவரிடையே பரிசல் கேட்டல், வழங்குதல் என்னும் உறவானது பல நிலைகளில் இருந்தது அரசனது இருப்பிடத்தை தேடிப் புலவர் சென்று பரிசிலை வழங்குதலும் இவர் இன்னவற்றை தந்தனர் நீயும் தரவேண்டும் என்று கூறுதலும் பரிசில் கொடுக்காத வரை படித்தல் கொடுத்த வரை புகழ்ந்து வருதல் என்பவை இருந்தமை, இதனை,

"............ வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்

**சான்றோர் பல யான் வாழும் ஊரே**
(புறநானூறு 191:4- 7)

இன்று புலவர் பிசிராந்தையார் தம் நரை இல்லாத இன்ப வாழ்விற்கும் அடங்கிய காரணங்களுள் முதன்மையானவற்றைச் செய்கின்ற மன்னனும் ஐம்புலனும் அடக்கிய கோட்பாடு உடைய சான்றோர் பலரும் ஊரில் வாழ்ந்ததே ஆகும் என்பது குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.

பண்டைய தமிழகத்தில் அரசர்களும் புலவர்களும் நெருங்கிய நண்பர்களாய் வாழ்ந்துள்ள னர். அதியமானின் அவைகளப் புலவராக ஔவையார் விளங்கினார். பாரையின் உயிர் நண்பராக கபிலர் திகழ்ந்தார். கோப்பெருஞ்சோழன் உயிர் நண்பராக பிசிராந்தையார் விளங்கினார். புகழ் தாத்தக்க செயல்கள் செய்தவிடத்து புலவர் கள் மன்னரை போற்றி பாராட்டினர். அரசர்களிடம் குறை கண்ட காலை அஞ்சாதி எடுத்துரைத்து அவர்களை அறநெறியின்பால் செலுத்தும் பண்பும் புலவர்களிடம் இருந்தது.

அருசாமையும் அற நெறியும் புலவர்களின் வழிகாட்டியாக திகழ்ந்தன மன்னரின் ஆதரவில் வாழ்ந்தாலும் கூட தவறு என்று பட்டதை தெளிவாக சொல்லும் ஆற்றல் புலவர்களுக்கு இருந்தது. அரசரின் அறநெறி தவறாத ஆட்சியும் மக்களின் குற்றமற்ற இன்பமும் நாட்டின் இடை இல்லாத நலமே பரிசில் வாழ்க்கையின் குறிக்கோள்களாகப் புலவருக்கு இருந்தன. அரசர்களுக்கு அமைச்சர்கள் போல இருந்து சமயம் அறிந்து அவர்களுக்கு இனிமையான மொழியினாலும் வன்மை மொழியினாலும் அறிவுரை கூறியுள்ளனர். புறப்பொருளில் இடம்பெறும் வாயுறை வாழ்த்து செவியறிவு போன்ற துறைகள் அரசர்க்கு அரை நெறிகளை எடுத்துக் கூறும் பாங்கில் காண முடிகிறது.

*" வாயுறை வாழ்த்து என்பது வெஞ்சொல் இன்றி இதைச் செய்தால் நலம் பயக்கும் என்று கூறுவதாகும் சினம் கொள்ளாமல் குற்றமற்றவர்களிடத்தில் பொறுத்துக் கொள் ளுதல் அறங்கூறல் செவியறிவு எனப்படு. இத்துறைகளில் பல பாடல்கள் புறநானூற் றில் இடம் பெற்றுள்ளன."*(சங்கத் தமிழ் இன்பம்..39) இன்று கா பே சந்திரசேகரன் குறிப்பிடுகின்றார்.

நாட்டை ஆளுகின்ற மன்னர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள் அன்பும் அருளும் ஆகும் இப்ப பண்புகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியே அறநெறி பட்டது. அத்தகைய ஆட்சியை நலத்தை பயக்கும். அதற்கு மாறான ஆட்சி நிறைவேறாது அழியும் என்பதனைக் கீழ்கண்ட பாடல் வழி அறிய முடிகின்றது.

**"குழவி கொள்பவரின் ஓம்புமதி!**
**அளிதோ தானே அதிபரல் அருங்குரைத்தே"**
(புறநானூறு 5:7-8)

குழந்தையை காப்பது போல மன்னர் மக்களை காக்கவேண்டும் என்ற அறநெறியை புலவர் அறிவுறுத்தும் பாங்கினை காண முடிகிறது.

**"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே**
**துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்**
**இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின்**
**தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே**
(புறநானூறு 165:1-5)

என்ற பாடலில் பெருந்தலைச் சாத்தனார் இளங்குமணனிடம் அறிவுரை கூறியதால் தன் சகோதரனை அடைந்து வந்தினன். இப்பாடலால் புலவர்கள் பரிசில் பெறுவது மட்டுமே நோக்கமாக அல்லாமல் அரசன் தவறு செய்யின் அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்தியமை அறியமுடிகிறது.

இவ்வாறு தமிழ் புலவர் பெருமக்கள் அரசருக்கு அரசியல் சூழ்ச்சிக்குரிய அமைச் சராக நல்லாட்டுப்படுத்தக்கூடிய ஆசிரியரா கவும் உலக இயல்புகளை எடுத்துரைத்து மெய்யுணர்வில் தலைப்படுத்தும் அறவோரா கவும் விளங்கினர். இவை யாவும் அரசன் நல்வழியில் செல்ல உறுதுணை புரிந்ததையும் அரசருக்கும் புலவர்க்கும் உள்ள தொடர்பு அமைந்ததை கருத முடிகிறது.

## மன்னரும் குறிப்பிட்ட புலவர் சார்பு

கபிலர், பரணர் போன்ற புலவர்களிடம் வறுமை புலம்பல்களையோ, புலவர் அனை வரும் ஒன்றாக கருத வேண்டும் என்ற குரலையும் பார்க்கவில்லை. இவர்கள்

ISSN 2320-4842

மன்னர்களுக்கும் பாரி, பேகன் போன்ற வள்ளல்களுக்கும் மிக நெருக்கமான உறவு உடையவராய் இருந்துள்ளனர் இவ்வகை புலவர்கள் மன்னர்களிடம் பெற்ற செல்வாக்கை புறப்பாடல்கள் காட்டுவது போலவே இவ்வகை புலவர்களை தம் புகழ் பாட வேண்டும் என மன்னர் விரும்பியதை காட்டுகிறது.

**"மாங்குடி மருதன் தலைவனாக**

**உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்**

**புலவர் பாடாது வரைக"**

(புறநானூறு 72 14-16)

என்கிற பாடல் சிறந்த தலைமையையும், மேம்பட்ட புலமையும் உடைய மாங்குடி மருதன் தலைவனாக உலகத்தில் வாழும் நிலைமை உடையோர் பலரோடும் பாராட்டப்பட்ட சிறப்பினை உடைய புலவர் பலரும் என் நிலையை பாடாது நீங்கட்டும் என்று தலையானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என வஞ்சினம் கூறுவதும்,

**"........................தாழாது**

**செறுத்த செய்யுள் செய் செந் நாவின்**

**வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்**

**இன்று ஊன்ஆயுள் நன்றுமன்**

(புறநானூறு 53)

என்று விரைவாக பல பொருள் அடங்கிப் பாடல்கள் புனையும் செவ்விய நாவினையும் ஒரு செறித்த புலமையையும் பலரும் அறிய நின்று விளங்கிய புகழ்மையும் உடையவன் கபிலன் என்று மாந்தரஞ்சேரல் இரும் பொறையிடம் பொருந்தில் இளங்கீரனார் கூறுவதும் குறிப்பிட்ட புலவர் தம் புகழைப் பாட வேண்டும் என்ற மன்னரின் மன இயல்பை காட்டுகிறது.

மன்னர்களுக்கு உற்றுழி உதவியும் ஊரையைக் கொண்டு கொல்லிமலையை சேரர்க்கு கொடுத்தவனுமாகிய மலையமான் திருமுடிக்காரியிடத்தும், மாறோகத்து நப்பசலையாரிடம் இருந்து கபிலரால் பாடப்படுவது சிறப்பு என்று எண்ணம் நிலவியிருந்ததை,

**"நிலமிசை பரந்த மக்கட் கெல்லாம்**

**புலனழுக் கற்ற வந்த ணாளன்**

**இரந்து சென் மாக்கட் கினியிட னின்றிப்**

**பரந்திசை நிற்கப் பாடின னதற் கொண்டு**

**..............................................................................**

**இன்மை துரப்ப இசைதர வந்துநின்**

**வண்மையிற் றொடுத்தனம் யாமே**

(புறநானூறு 126)

என்கிற பாடலால் நப்பசலையார் நீயும் நின் சுற்றமும் பெருக, கபிலன் பாடிய உன்னை புலவர்கள் இனி புகழ்வதற்கு இடம் இல்லை எனும் படியாக உன்னுடைய புகழ் உயர்வுடன் நிறைவேற்று நிற்கும்படி பாடினான். எங்களுடைய வறுமையானது துரத்த உன் புகழை நினைத்து, உன் கொடை தன்மையில் சிலவற்றை பாடியதாகக் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

புலவர்கள், சமூகத்தில் பெரிதும் மதிக்கப் பட்டிருந்தனர். குறுநில மன்னர்கள் புலவர்களின் சொல்லுக்குப் பெரும் மதிப்பு இருந்தது. மன்னர்கள் புலவர்கள் பாராட்டினை எதிர்பார்த்னர். புலவர்கள் பல நாடுகளைக் கடந்து வேற்றுமையின்றிப் பாடினர். மன்னர்களுக்கு அறிவுரை கூறுகின்ற அமைச்சராகவும், நண்பராகவும் விளங்கினர். மன்னர்கள் புலவர்கள் மீதிருந்த மதிப்பினால் அவர்களுடைய மிகையான செயல்களையும் பொறுத்தனர். புலவர்கள் மூலம் மன்னர் புகழ் பரவியது உண்மையாகும். புலவர்கள் அவர்களிடம் நன்றியோடு நடந்து கொண்டனர். தம் பாடல்களில் மன்னர்களின் பெயரை நிலைபெறச் செய்தமை அறியமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்


1. சங்கத் தமிழ் இன்பம், கா.பெ.,சந்திர சேகரன், சேகர் பதிப்பகம், சென்னை: முதற்பதிப்பு - ஏப்ரல் 2004
2. சங்க இலக்கியத்தின் வேந்தர்கள், அரங்க. இராமலிங்கம், பாரதி புத்தகலாயம், சென்னை. முதற்பதிப்பு - ஏப்ரல் 2004
3. புறநானூறு, அ.மா.பரிமணம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர், சென்னை. முதற்பதிப்பு - ஏப்ரல் 2004